கனம் தலைமை குற்றவியல் நடுவர் / சார்பு நீதிபதி, இராமநாதபுரம்

அவர்கள் முன்பாக

# FIRST INFORMATION REPORT

**Under Section 173 BNSS**

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(~~குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்~~) C 8120310

1. District : இராமநாதபுரம் PS: மா.தா.க மரைவு Year: 2025 FIR No.: 09/2025 Date: 05.05.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: P.C. Amendment Act, 2018 Sections பிரிவுகள்: 7(a), (b) of P.C.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Amendment Act, 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 03.05.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை காலை 8 மணி 30 நிமிடம்
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 05.05.2025 Time : காலை 9 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் பகுதி-I நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்-மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 75 கி.மீ வடக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : பனிச்சகுடி குருப் வி.ஏ.ஓ அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கா. ரகுமா பீவி (b) Father's/ Husband's Name : காசி மீரா
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 42/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம் (g) Address : 1/161, கிழக்கு தெரு, வருவாக்கோட்டை கிராமம்
தொழில் முகவரி திருவாடானை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. காளை முத்து, கிராம நிர்வாக அலுவலர், பனிச்சகுடி குருப்
2) திருமதி. சித்ரா, கிராம உதவியாளர், பனிச்சகுடி குருப்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதம் ஏதுமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) .

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 05.05.2025 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி கா.ரகுமாபீவி ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பனிச்சகுடி குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.நைனா முகமது மற்றும் கிராம உதவியாளர் திருமதி. சித்ரா ஆகியோரது முன்நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.09/2025 u/s 7 (a), (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 05.05.2025 ஆம் தேதி 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் விபரம் பின்வருமாறு அனுப்புநர் கா. ரகுமாபீவி, வயது 42/2025 க/பெ. காசி மீரா, 1/161, கிழக்குத்தெரு, பெருவாக்கோட்டை கிராமம், திருவாடனை தாலுகா, இராமநாதபுரம்மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கா. ரகுமா பீவி

05.05.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

5-5-25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.05.2025 - 9.50 மணி

Name: பெயர் ..... (M. குமரேசன்)
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
ஊ.த.த. பிரிவு
இராமநாதபுரம்

இராமநாதபுரம்ஊழல்தடுப்புமற்றும்கண்காணிப்புபிரிவுகுற்றஎண்09/2025 u/s 7 (a), (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின்தொடர்ச்சி

லஞ்சஒழிப்புத்துறை, இராமநாதபுரம் அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது கணவர் காசி மீரா வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், பனிச்சகுடி கிராம சர்வே எண்.222/11ல் எங்களுக்கு சொந்தமாக ஒன்னறை சென்ட் காலியிடமானது எனது கணவர் காசி மீரா பெயரில் உள்ளது. மேற்படி இடத்தில் வீடு கட்டுவதற்காக இடத்தை அரசாங்க சர்வேயர் மூலம் அளக்க வேண்டி கடந்த 03.05.2025 ஆம் தேதி எனது மகன் புரோஸ்கான் பெயரில் தனியார் இ சேவை மையத்தில் அதற்கான உரிய அரசாங்க தொகை ரூ.860/-ஐ செலுத்தி விண்ணப்பம் செய்தேன். அதன் பின்பு நான் சுமார் 08.00 மணிக்கு பனிச்சகுடி தலையாரி சித்ரா என்பவருக்கு போன் செய்து மேற்படி விபரத்தை கூறி அளப்பதற்கு எப்ப வருவீங்க என கேட்டேன், அதற்கு அவர் உங்க ஏரியாவுக்கு தான் நாங்க அளக்க வாறோம் ஆனா உங்க இடத்தை இன்னைக்கு அளக்க முடியுமா என இப்போ தெரியாது அதனால கொஞ்ச நேரம் கழிச்சு அடிங்க எனச் சொன்னதால் சுமார் 08.30 மணிக்கு மீண்டும் நான் போன் செய்த போது அவர் உங்கள் ஏரியாவுல நிறையா இடத்தை அளக்க வேண்டியிருப்பதனால் இன்னைக்கே உங்க இடத்தையும் அளந்து விடுகிறோம் இன்னைக்கு விட்டுட்டா உங்க இடத்தை அளக்க ஒரு மாசம் ஆகும் என்றும் ஆனா உங்க இடத்தை அளக்க ரூ.4000/- கொடுக்கணும் என்று சொன்னார். அதற்கு நான் 11/2 செண்ட் சின்ன இடம் தானே என கேட்டதற்கு, அவர் பொதுவா ஒரு சர்வேக்கு ரூ.4000/- தான் ஊர்ல வாங்கிட்டு இருக்கோம் உங்களுக்காக வேனா ரூ. 500/- குறைத்து ரூ.3500/- ரூபாய் கொடுங்க நீங்க கொடுக்குற பணத்துல எங்களுக்கு கொஞ்சம் தான் கொடுப்பாங்க மீதிப்பணமெல்லாம் தாசில்தாருக்கும் சர்வே டிபார்மெண்டில் உள்ளவர்களுக்கும் தான் போய் சேரும் என கூறி போனை வைத்து விட்டார். அதன் பின்பு சுமார் 09.00 மணியளவில் நான் மீண்டும்

போன் செய்து எனக்கு பணம் தர வழியில்ல என சொன்னதற்கு கொஞ்சம் யோசித்து சொல்லுங்கள் என கூறி போனை வைத்து விட்டார். பின்னர் மீண்டும் 09.30 மணிக்கு போன் செய்து ஏதாவது குறைக்கறதுக்கு வாய்ப்பு இருக்கா நான் கஷ்டப்படுகிறேன் என கேட்டதற்கு அவர் விஏஓவிடம் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறி 09.45 மணிக்கு என்னை தொடர்பு கொண்டு ஏற்கனவே நான் சொன்னபடியே கொடுக்க சொல்லிட்டாரு என கூறினார். அதன் பிறகு அன்று மதியம் சுமார் 1.30 மணிக்கு பனிச்சகுடி விஏஓ நைனாமுகம்மது, தலையாரி சித்ரா மற்றும் சர்வேயர் ஆகியோர்கள் எங்க ஏரியாவில் உள்ள சிலரது இடத்தை அளக்க வந்தவர்கள் எனது கணவர் பெயரில் உள்ள இடத்தை அளந்து விட்டு என்னை விஏஓ ஆபிசுக்கு உடனே வந்து பாருங்க என்று தலையாரி சொல்லி விட்டு சென்றார். நான் மதியம் சுமார் 02.00 மணிக்கு பனிச்சகுடி விஏஓ ஆபிசுக்கு போய் விஏஓ வை பார்த்த போது, உங்கள் இடத்தை அளந்ததற்கு ரூ.3500/- கொடுங்க எனக் கேட்டார். அதற்கு நான் என் கையில ரூ.1000/- வீட்டு செலவுக்காக வச்சுருக்கேன் எனச்சொன்னேன். அதற்கு விஏஓ அந்தபணத்தை இப்ப கொடுங்க மீதிப்பணம் ரூ.2500/-ஐ திங்கட்கிழமை 05.05.2025 ஆம் தேதி காலையில என் ஆபிசுக்கு வந்து கொடுங்க என வற்புறுத்தி கேட்டதனால் நான் கையில் வைத்திருந்த ரூ.1000/-ஐ வேறு வழியில்லாமல் விஏஓ விடம் கொடுத்து விட்டு வீட்டிற்கு வந்தேன். அது பற்றி நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்த போது அரசு பணியை செய்ததற்கு வெகுமதியாக லஞ்சப்பணம் ரூ.2,500/- கேட்ட திருவாடனை தாலுகா, பனிச்சகுடி குரூப் விஏஓ நைனாமுகமது மற்றும் தலையாரி சித்ரா ஆகியோர்கள் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட திருவாடனை தாலுகா. பனிச்சகுடி குரூப் விஏஓ நைனாமுகமது மற்றும் தலையாரி சித்ரா ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு(ஒப்பம்) கா.ரகுமாபீவி. Received the complaint on 05.05.2025 at 09.00 hrs and Enquired the Character and Antecedents of the complainant and accused and registered a case in Ramnad V&AC, Cr.No.09/2025 u/s 7(a), (b) of P.C. Amended Act 2018

at 09.30 hrs. (Sd) M. Kumerasan, Inspector of Police. V&AC, Ramanathapuram 05.05.2025. இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

05/05/2025

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
இராமநாதபுரம்.